

# சிதம்பரம் நகராட்சி

## 2024–2025 ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

### 1. அமைப்பும் , நிர்வாகமும்

### 1 எல்லை:

நகராட்சியின் மொத்த பரப்பளவு 4.82 சதுர கிலோ மீட்டர் ஆகும். இந்நகரம் வடக்கே கிராம எண். 132 ல் உள்ள லால்புரம் கிராம எண். 125 ல் உள்ள தில்லை நாயகபுரம் கிராமமும் தெற்கே கிராம எண். 123 ல் உள்ள சிதம்பரம் விவசாய நிலங்களும் மற்றும் கிராம எண். 107 ல் உள்ள உசுப்பூர் கிராமமும் , மேற்கே கிராம எண். 122 ல் உள்ள தண்டேஸ்வர நல்லூர் கிராமமும் கிழக்கே பள்ளிப்படை கிராம 154 மற்றும் சி கொத்தங்குடி கிராம எண் 158 எல்லைகளாக அமைந்துள்ள நகரமாகும். அறிக்கை ஆண்டில் எல்லைகளில் மாற்றம் ஏதும் இல்லை.

இந்நகரம் தமிழ் நாட்டில் உள்ள சிவ ஸ்தலங்களில் மிகவும் தொண்மை வாய்ந்த நகரமாகும். பூலோக கைலாசம் என புகழ் பாடும் தொல்லைகளைப் போக்கும் தில்லையம்பதி இங்கு பிரசித்திப் பெற்றுள்ள சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் ஆனந்த நடராஜ மூர்த்தி ஆலயத்திற்கு பக்தர்கள் நாடெங்கிலிருந்தும் வந்து தரிசிக்கின்றனர். மேலும் தில்லை ஸ்ரீ கோவிந்தராஜ பெருமானும் இங்கு பள்ளிக்கொண்டு பக்தர்களுக்கும் அருள் பாலித்து வருகிறார். சிவனையும் , திருமாலையும் ஒரே இடத்தில் நின்று தரிசிப்பது தமிழ் நாட்டிலேயே இத்திருக்கோயிலில் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

சிதம்பரத்திற்கு அருகே மிகவும் பெயர் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் நிலக்கரிச் சுரங்கம் அமைந்துள்ள நெய்வேலி நகரமும் வள்ளலார் அவதரித்த மருதூர் மற்றும் ஜோதியான வடலூரும் அமைந்துள்ளன. நகரின் அருகே மிகவும் வரலாற்று புகழ் பெற்ற பரங்கிப்பேட்டை கடற்கரை அமைந்துள்ளது. கிழக்கே கிள்ளை என்னும் ஊருக்கு அருகே பிச்சாவரத்தில் சுர புன்னை காடும் நீர் நிலைகளும் அருகருகே அமைந்துள்ளது. அங்கு , தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ள சுற்றுலா மையம் மனதைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. நாள்தோறும் பெருகி வரும் பக்தர்களை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு சிதம்பரம் நகரையும் பிச்சாவரத்தினையும் சுற்றுலா நகரமாக அறிவித்து , தமிழ்நாடு சுற்றுலாத் துறையினரால் தங்கும் விடுதியும் , உணவுக் கூடமும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சி 25–03–1873 ந் தேதிய 399 ம் எண் நிதித்துறை அரசாணையின் படி ஆரம்பிக்கப்பட்டு நூறு ஆண்டு கடந்த பெருமை பெற்றுள்ளது. 10–11–1949 ம் தேதிய 2302 ம் எண் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை உத்தரவில் மூன்றாம் நிலை நகராட்சியிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியாகவும் பின்பு 09–08–1974 தேதிய 1815 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை உத்தரவில் இரண்டாம் நிலை நகராட்சியிலிருந்து முதல் நிலைக்கும் உயர்த்தப்பட்டுள்ளது. முதல் நிலையில் இருந்து 22–05–1998 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 85 ன் படி 22–05–1998 முதல் தேர்வு நிலைக்கு உயர்த்தப்பட்டு உள்ளது. 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள மக்கள் தொகை –62153, ஆண்கள் –30582, பெண்கள் –31517.

## (2) தேர்தல் மற்றும் வார்டு பிரிவினைகள்.

சிதம்பரம் நகர் மன்றத்திற்கு **33** நகர் மன்ற உறுப்பினர்கள் என நிர்ணயம் செய்தும் கீழ்க்கண்டவாறு பெண்களுக்கும், ஆதி திராவிடர்களுக்கும் உரிய வார்டுகள் ஒதுக்கீடு செய்தும் **20.05.2019** நாளிட்ட **219** அறிக்கை எண் மற்றும் அரசாணை எண் **61** நாள் **20.05.2019** உள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணையில் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

மொத்த வார்டுகள் எண்ணிக்கை = **33**

ஆதிதிராவிடர் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட
வார்டு எண்ணிக்கை = **01**

பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது
வார்டு எண்ணிக்கை = **16**

19.02.2022 அன்று நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் நடத்தப்பட்டது. மேலும், 22.02.2022 அன்று வாக்கு எண்ணிக்கை நடத்தப்படடு, கீழ்க்கண்ட விபரப்படி நகரமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மொத்த வார்டுகள் எண்ணிக்கை = **33**
ஆதிதிராவிட பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட
வார்டு எண். = வார்டு எண்.**4**

ஆதிதிராவிடர் பொது ஒதுக்கீடு செய்யப்பட்ட
வார்டு எண். = வார்டு எண்.**1**

பெண்கள் பொது ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டு = **3, 5, 6, 8, 10, 15, 18, 19, 21, 22, 24, 28, 29, 30, 31, 32**

பொது வார்டு= **2, 7, 9, 11, 12, 13, 14, 16, 17, 20, 23, 25, 26, 27, 33**

நகர்மன்றம் – தற்போது உள்ள நகர்மன்றம் **2024–25 –31.03.2025**

**1) திரு கே. ஆர். செந்தில்குமார், நகர்மன்றத்தலைவர்**
**2) திரு ம. முத்து (எ) முத்துகுமரன் , நகர்மன்றத்துணைத்தலைவர்**

| வ. எண். | வார்டு | நகர்மன்ற உறுப்பினர் பெயர் | நகர்மன்ற உறுப்பினர் பெற்றோர்/கணவர்/ மனைவியின் பெயர் | கைபேசி எண் |
|---|---|---|---|---|
| 1 | 1 | திருமதி லதா தி | தியாகராஜன் பெ | 9442959147 |
| 2 | 2 | திரு ராஜா சு | சுப்பிரமணியன் வி | 8778522186 |
| 3 | 3 | திருமதி குணசுந்தரி பா | பாலகிருஷ்ணன் | 9894231183 |
| 4 | 4 | திருமதி ஜெயசித்ரா பாலசுப்பிரமணியன் பா | பாலசுப்பிரமணியன் | 9080336690 |
| 5 | 5 | திருமதி தஸ்லிமா ஜெ | ஜெகபர் ஹாஜா | 9442477430 |
| 6 | 6 | திருமதி கவிதா சரவணன் எஸ் | சரவணன் க | 9840336352 |
| 7 | 7 | திரு புகழேந்தி சு | சுப்ரமணியன் | 8610319019 |
| 8 | 8 | திருமதி சித்ரா ஆர் | ரவிசங்கர் சு | 9790146490 |
| 9 | 9 | திரு சரவணன் தி | தில்லை சிதம்பரம் | 9500320092 |
| 10 | 10 | திருமதி ஷகிலா எம் | முகமது இஸ்மாயில் | 9789706325 |
| 11 | 11 | திரு ராஜன் சி க | சி ப கண்ணையன் | 9443079853 |
| 12 | 12 | திரு அசோகன் கே ஜி | கோதண்டராமன் | 9865078522 |
| 13 | 13 | திரு இரமேஷ் ஆ | ஆடியபாதம் | 9488800004 |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | 14 | திரு செந்தில்குமார் கேஆர் | வே.ராமநாதன் | 9952213434 |
| 15 | 15 | திருமதி கல்பனா மு | சண்முகசுந்தரம். சி | 9843265558 |
| 16 | 16 | திரு ஜேம்ஸ் விஜயராகவன் த | தர்மலிங்கம் | 9443542919 |
| 17 | 17 | திரு ஏஆர்சி மணிகண்டன் பி | பெருமாள் | 9842259700 |
| 18 | 18 | திருமதி வளர்மதி சீ | சீனுவாசன் | 9047163572 |
| 19 | 19 | திருமதி விஜயலட்சுமி வே | சு.கோ. வேலு | 9443544052 |
| 20 | 20 | திரு வெங்கடேசன் இரா | ராமச்சந்திரன் கி | 9585035998 |
| 21 | 21 | திருமதி தரணிஅசோக் அ | அசோக் ஆர். | 9443088487 |
| 22 | 22 | திருமதி சுதா கு | சி. குமார் | 9364660002 |
| 23 | 23 | திரு அப்பு சந்திரசேகரன் ப | பழனிசாமி | 9688155513 |
| 24 | 24 | திருமதி மஞ்சுளா ஜெ | ஜெயபால் | 9445434511 |
| 25 | 25 | திரு சுதாகர் கு | குருமூர்த்தி | 9994647888 |
| 26 | 26 | திரு அறிவழகன் ஜெ | ஜெயராமன் | 9443221688 |
| 27 | 27 | திரு ஹஜ்ஜிமுகமதுமக்ஹின் ர | ரகமத்துல்லா | 9894192656 |
| 28 | 28 | திருமதி சுந்தரி சேகர் சே | சேகர் ஆர் | 9025461019 |
| 29 | 29 | திருமதி சுனிதா மா | மாரியப்பன் | 8438620900 |
| 30 | 30 | திருமதி லதா அ | .அறிவழகன். ந | 9944852087 |
| 31 | 31 | திருமதி அ இந்துமதி அருள் | அருள் | 9994483345 |
| 32 | 32 | திருமதி பூங்கொடி தி | தியாகராஜன் | 9677381824 |
| 33 | 33 | திரு முத்து எ முத்துகுமரன் ம | மணி | 9487804259 |

**அ) ஆணையாளர்:**

**01.04.2024** முதல் **31.03.2025** வரை திருமதி.த.மல்லிகா, ஆணையாளர் அவர்கள் பணியாற்றியுள்ளார்.

**ஆ) பொறியாளர்:**

01.04.2024 முதல் 31.03.2025 வரை திரு.எஸ்.சுரேஷ், பொறியாளர் பணியாற்றியுள்ளார்.

**இ ) மேலாளர் பணியிடம்:–**

01.04.2024 முதல் 15.07.2024 திருமதி.எஸ்.செல்வி கணக்கர், வரை 16.07.2024 முதல் 07.10.2024 வரை 08.10.2024 முதல் 31.03.2025 வரை திருமதி.எஸ்.செல்வி கணக்கர் அவர்கள் மேலாளராக பணியாற்றியுள்ளார்.

**ஈ) வருவாய் அலுவலர் பணியிடம் :**

**1995** ம் ஆண்டில் ஆட்குறைப்பு செய்யப்பட்டதால் பணியிடம் இல்லை.

**உ) கணக்கர்**

01.04.2024 முதல் **31.03.2025** வரை திருமதி.எஸ்.செல்வி, கணக்கராக பணியாற்றியுள்ளார்.

**3. கூட்டங்கள்:**

(அ) **01.04.2024** முதல் **31.03.2025** வரை கீழ்க்கண்டுள்ள படி நகரமன்றக் கூட்டம் நடைப்பெற்றுள்ளது.

| கூட்டம் | நடைபெற்ற கூட்டத்தின் எண்ணிக்கை | நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சாதாரண கூட்டம் | | |
| அவசரக்கூட்டம் | | |

2024–2025 ம் ஆண்டு நடைபெற்ற நகர் மன்றக் கூட்டப் பொருள்கள் அனைத்தும் அன்றே முடிக்கப்பட்டது. 22–09–1938 ம் தேதிய அரசாணை எண். 3807 (ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் படி) கூட்டங்கள் நடத்தும் முறை பின்பற்றப்பட்டது.

**4. குழுக்கள்:**

தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 68 (1) ன் படியும் 73 ன் படியும் அமைக்கப்பட்ட குழுக்களின் கூட்டம் கீழ்க்கண்ட குழுக்களின் கூட்டம் நடைபெற்றது.

| | கூட்டங்களின் எண்ணிக்கை | பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. நியமனக்குழு | 1 | 1 |
| 2. ஒப்பந்த குழு | - | - |
| 3. வரிமேல்முறையீட்டுகுழு | - | - |

மன்றக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் தலைவர் உறுப்பினர்களுக்கு அமர்வு படி 2024–2025 ரூ.21,60,000/– யாண்டில் செலவு செய்யப்படுள்ளது.

**5. நிர்வாகம்: அலுவலகம்:** பொது, வருவாய், தொழில்நுட்ப பிரிவு, நகரமைப்பு பிரிவு, கணக்கு பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதாரம் துப்புரவு பணியாளர் உட்பட முதலிய துறைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கான 2024–2025ம் ஆண்டுக்கான ஊதியம் அகவிலைப்படி வீட்டு வாடகைப்படி முதலான செலவுகள் (ரூ.6.93லட்சம் ஆகும்) 01–10–2004 முதல் ஓய்வூதியதாரர்களுக்கு குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு உள்ளாட்சி நிதி தணிக்கை துறைமூலம் வங்கி வாயிலாக ஓய்வூதியம் வழங்கபடுகிறது.

**<u>கணினிமயமாக்குதல்: ( COMPUTERISATION )</u>**

இந்நகராட்சியில் 2017 ஆண்டு டிசம்பர் முதல் நகராட்சி அனைத்து சேவைகளும் (UTIS) இணையதளம் மூலம் பிறப்பு இறப்பு பதிவுகள் அனைத்தும் கணினியில் பதிவு செய்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அனைத்து கணக்கு முறைகளும் கணினி மயமாக்கப்பட்டது. அதன்படி வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூல் யாவும் கணினி மயமாக்கப்பட்டது.

டிசம்பர் 2017 முதல் UTIS என அழைக்கப்படும் Centralized Web Based System என மேம்படுத்தப்பட்ட மென்பொருள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. அதன் முதல் கட்டமாக 12 Modules நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்படி Citizen Portal உருவாக்கப்பட்டு பொது மக்கள் அவர்கள் இருக்கும் இடத்திலேயே பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளும் முறை நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. மேலும் பொது மக்கள் செலுத்திட வேண்டிய சொத்துவரி, தொழில்வரி, தண்ணீர் கட்டணம் மற்றும் கடை வாடகை ஆகியகை Online மூலமாகவும் Debit/credit card/Net banking மூலமாகவும் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது (https://tnurbanepay.tn.gov.in). மேலும் D&O மற்றும் கட்டிட அனுமதி விண்ணப்பித்து அனுமதி பெறும் நடைமுறை கணினி மயமாக்கப்பட்டுள்ளது.

**<u>தகவல் மையப்பணிகள்:</u>**

1. அறிக்கை ஆண்டில் பெறப்பட்ட பிறப்பு, இறப்பு விண்ணப்ப படிவங்கள்

| முடிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | |
|---|---|
| பிறப்பு | 936 |
| இறப்பு | 89 |

2. அறிக்கை ஆண்டில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்யக்கோரி

| | |
|---|---|
| பெறப்பட்ட விண்ணப்பங்கள் | 269 |
| முடிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | 269 |
| நிலுவை விண்ணப்பங்களின் எண்ணிக்கை | – |

3. அறிக்கை ஆண்டில் பெறப்பட்ட கட்டிட விண்ணப்பங்கள்

| | |
|---|---|
| விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 56 |
| அனுமதி வழங்கப்பட்ட விண்ணப்பங்கள் | 56 |
| மறுக்கப்பட்ட விண்ணப்பங்கள் | – |

4. அறிக்கை ஆண்டில் பெறப்பட்ட குடிநீர் குழாய் இணைப்பு

| | |
|---|---|
| விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 0 |
| இணைப்பு கொடுத்தவை | 0 |
| திருப்பி அனுப்பப்பட்டவை | 0 |

5. அறிக்கை ஆண்டில் புதைவடிகால் இணைப்பு கோரி வரப்பெற்ற விண்ணப்பங்கள்

| | |
|---|---|
| விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 1032 |
| இணைப்பு கொடுத்தவை | 940 |
| நிலுவை உள்ளவை | 92 |

## 6. சாலைகள் ( ரோடுகள் ), பாலங்கள் கட்டிடங்கள் :–

இந்நகரில் தேசிய நெடுஞ்சாலை (நேஷனல் ஹைவேஸ் NH45A) அமைந்துள்ளது. இந்நகராட்சி எல்லைக்குள் இருக்கும் நகராட்சி ரோடுகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தார் சாலைகள் | 35363 மீ |
| கான்கிரீட் சாலைகள் | 16062 மீ |
| கருங்கல் ஜல்லி சாலைகள், பேவர்பிளாக் சாலைகள் | 2114 மீ |
| மண் மற்றும் இதர சாலைகள் | 2296 மீ |
| **மொத்தம்** | **55.835.கி.மீ** |

**7.** பொறியியல் பிரிவு வேலைகள் ரோடுகள், கால்வாய்கள் , பாலங்கள் கட்டிய வகையில் அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட செலவினங்கள் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | இனம் | செலவின தொகை ரூபாய் லட்சத்தில் |
|---|---|---|
| 1 | சிதம்பரம் நகராட்சி பிரதான தேராடும் மேலவீதி மற்றும் தெற்கு வீதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் நடைபாதை அமைக்கும் பணி. | 9.95 |
| 2 | சிதம்பரம் நகராட்சி ரதவீதிகள் மற்றும் பிரதான சாலைகளில் புதியதாக அலங்கார மின் கம்பங்களுடன் LED விளக்குகள் அமைக்கும் பணி | 131.00 |
| 3 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட கன்னிராமன் தெருவில் சதாமூதாய கழிவறை கட்டும் பணி | 19.00 |
| 4 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட தட்சன் குளத்தை தூர்வாரி மேம்பாடு செய்யும் பணி | 95.00 |
| 5 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட ஜி.என் நகர் பூங்கா மேம்பாடு செய்யும் பணி | 27.00 |
| 6 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட சுசிலாம்பாள் நகர் பூங்கா | 19.00 |

| | | |
|---|---|---|
| | மேம்பாடு செய்யும் பணி | |
| 7 | சிதம்பரம் நகராட்சி அரசு காமராஜ் மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணி | 500.00 |
| 8 | சிதம்பரம் நகராட்சி வடக்கு மெயின்ரோட்டில் உள்ள நகர்புற சுகாதார மையத்தில் முதல் தளத்தில் கூடுதல் கட்டிடம் கட்டும் பணி | 60.00 |
| 9 | சிதம்பரம் நகராட்சி வக்காராரி தலைமை நீரேற்று குளத்தை மேம்பாடு செய்யும் பணி | 203.00 |
| 15 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட பாரதிதெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 5.50 |
| 16 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட வாகீச நகரில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி | 14.50 |
| 17 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட நடராஜா கார்டன், இளமையாகக்னார் கோவில் மேற்கு மற்றும் கிழக்கு தார்சாலை அமைக்கும் பணி | 27.00 |
| 18 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட ஞானபிரகாசம் தெரு , நிர்மலா பள்ளி தெரு, காந்தி நகர் முதல் குறுக்கு தெரு ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணி | 25.00 |
| 19 | சிதம்பரம் நகராட்சி லால்புரம் பகுதியில் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி | 1500.00 |
| 20 | சிதம்பரம் நகராட்சி இராஜலட்சுமி நகரில் பூங்கா அமைக்கும் பணி | 25.00 |
| 21 | சிதம்பரம் நகராட்சி கொத்தங்குடி தெருவில் கூடுதல் வகுப்பறை கட்டும் பணி. | 52.50 |
| 22 | சிதம்பரம் நகராட்சி மாலைகட்டி தெருவில் கூடுதல் வகுப்பறை கட்டும் பணி | 57.00 |
| 23 | சிதம்பரம் நகராட்சி வடக்கு மெயின்ரோடு மீன்மார்கெட்டில் கழிவறை கட்டும் பணி | 54.00 |

## 8. தங்கும் விடுதி:

நகராட்சிக்கு சொந்தமான தங்கும் விடுதி ஏதும் இல்லை

## 9. தெரு விளக்கு வசதி :

நகராட்சியில் கீழ் கண்டவாறு தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வரப்பெறுகின்றது.. நகரில் நகரட்சியால் பராமரிக்கப்படும் விளக்குகள் எண்ணிக்கை.

1) 40 வா குழல் விளக்கு – 1493 எண்ணிக்கை
2) 20 வா சிஎப்எல் – 14 எண்ணிக்கை
3) 35 வா சிஎப்எல் – 18 எண்ணிக்கை
4) 45 வா சிஎப்எல் – 35 எண்ணிக்கை
5) 85 வா சிஎப்எல் – 131 எண்ணிக்கை
6) 250 வா சோடியம் ஆவிவிளக்கு – 579 எண்ணிக்கை
7) எச்எம்எல் – 15 எண்ணிக்கை

**மொத்தம் 2297 எண்ணிக்கை**

அறிக்கை ஆண்டில் மின் கட்டணம், வைப்புத் தொகை மற்றும் பராமரிப்பு செலவு ரூ.10076288/- ஆகும்.

## 10. பொறியியல் பிரிவில் பயண்படுத்தப்படும் வாகனங்க விவரம்

| வ.எண் | வாகன எண் | Type of Vehicle |
|---|---|---|
| 1 | TN 31 BY 4367 | Jet rodding |
| 2 | TN 31 BW 4147 | Bolero Jeep |

| | | |
|---|---|---|
| 3 | TN 31 AY 4344 | Water Tanker Lorry |
| 4 | TN 31 AY 3146 JCB | JCB |
| 5 | TN 31 AW 1729 | Tractor with dozer |
| 6 | TN 31 AM 6181 | Tanker |
| | TN 31 AM 3199 | Tipper trailer |
| 7 | TN 31 R 4379 | Sullage tanker lorry |
| 8 | TN 91 F 8514 | New Jet rodding machine cum suction machine |
| 9 | TN 91 F 8590 | Desilting hydralic |
| 10 | TN 91 F 7705 | Scorpio |
| 11 | Skid loader | Skid loader |
| 12 | JCB | JCB |

## 11. கல்வி வசதி:

நகராட்சி எல்லைக்குள் 4 நகராட்சி ஆரம்பப் பள்ளிகளும் 4 நகராட்சி நடு நிலைப்பள்ளிகளும் மற்றும் ஒரு உயர்நிலை பள்ளியும் அறிக்கை ஆண்டில் கல்வித் துறையினரால் நடத்தப்பட்டு வருகிறது. இது தவிர அரசினரால் நிதி உதவி பெறும் தனியார் பள்ளிகளும் அரசு பள்ளிகளும் கீழ்க்கண்டவாறு நடத்தப்பட்டது. நகராட்சி பள்ளிகளில் மொத்தம் 47 ஆசிரியர்கள் ஆசிரியைகள் பணிபுரிந்து வருகின்றனர். நகராட்சி பள்ளிகளில் மொத்தம் 855 மாணவியர் பயின்று வருகின்றனர். இதில் மாணவர்கள் 394 மாணவிகள் 461 எண்ணிக்கை ஆகும்.

| | | |
|---|---|---|
| அரசினர் நந்தனார் பெண்கள் மேல் நிலைப்பள்ளி | = | 1 |
| அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி | = | 1 |
| தனியார் துவக்கப் பள்ளிகள் | = | 8 |
| தனியார் நடுநிலைப் பள்ளிகள் | = | 3 |
| தனியார் மேல்நிலைப் பள்ளிகள் | = | 4 |

இது தவிர அரசினரிடமிருந்து நிதிஉதவி பெறாத தனியார் மேல் நிலைப்பள்ளிகளும், மெட்ரிகுலேஷன் பள்ளிகளும் , நர்சரிப்பள்ளிகளும் சேர்த்து மொத்தம் 10 பள்ளிகள் நடைபெற்று வருகிறது. 2005 ஜீன் மாதம் முதல் சம்மந்தகாரத்தெரு நகராட்சி நடுநிலைப்பள்ளி பெண்கள் உயர்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தி அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

## 12. எண்ணிக்கையும் திறமையும்:

கல்வித் துறை நிர்வாகத்தின் கீழ் உள்ள நகராட்சி பள்ளிகள் அனைத்திலும் மொத்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை 1119 ஆகும். அதில் மாணவர்கள் 460 மாணவிகள் 552 ஆகும். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனியாக பள்ளிகள் ஏதும் நகராட்சி எல்லைக்குள் நடத்தப்பெறவில்லை. இவர்களுக்கு எந்தப் பள்ளியிலும் நுழைவு அனுமதி மறுக்கப்படுவதில்லை. தனியார் பள்ளிகளிலும் மற்றும் அரசு பள்ளிகளிலும் படிக்கும் மொத்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை 21210 ஆகும். இது சென்ற ஆண்டு 21186 ஆக இருந்தது.

## 13. உயர் நிலைக் கல்வி மற்றும் மேல் நிலைக் கல்வி:

இந்நகராட்சியால் சம்மந்தக்காரத் தெரு பெண்கள் உயர் நிலைப்பள்ளி, நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி பள்ளியில் 141 மாணவ மாணவிகள் கல்வி பயில்கின்றனர். தனியார் மற்றும் அரசு மேல் நிலைப்பள்ளிகள் 5 நடத்தப்படுகிறது. இதில் சுமார் 9640 மாணவ மாணவிகள் உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் படித்து வருகின்றனர்.

## 14. சிறப்புப் பணிகள் பொது நூல் நிலையம் :

நகரில் தமிழக அரசாணைக்குட்பட்ட நூலக ஆணைக் குழுவினரால் ஓர் நூலகம் பராமரிக்கப்பட்டு வரப்பெறுகிறது. அது நமக்கு நாமே திட்டத்தில் ரூ.48.00 லட்சத்தில் கச்சேரி தெருவில் புதிய நூலகம் கட்டி முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## 15. Dr.முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதி உதவி (2024–2025 )

| வ.எண் | அரசால் வழங்கப்பட்ட தொகை | தொகை | பயனடைந்த கர்ப்பினி பெண்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2024–25 அரசால் வழங்கப்பட்ட தொகை | ரூ.27,00,000 | 1207 |

| குழந்தைகளுக்கு போடப்பட்ட தடுப்பூசி விபரம் 2024–2025 | | | |
|---|---|---|---|
| 1 | BCC | 0–15 Days | 446 |
| 2 | Pentavalent IstDose | 0–45 Days | 446 |
| 3 | Pentavalent IInd Dose | 0–75 Days | 450 |
| 4 | Pentavalent IIIrd Dose | 105 Days | |
| 5 | Measles | 9 to 10 month | 450 |
| 6 | DPI-Booster | 1½ Years to 2 Years | 520 |
| 7 | JE Vacine | 1½ Years to 2 Years | 520 |
| 8 | Pulse Polio Drops | Feburary II Dose | 5600 |
| 9 | Injection T.T 1st Dose | | 560 |
| 10 | Injection T.T 2nd Dose | | 560 |

### மொத்த மகப்பேறு

| வ.எண் | மாத்திரைகளின் பெயர் | பயனடைந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | T FST I st Dose | 650 |
| 2 | T FST II nd Dose | 510 |
| 3 | T FST III rd Dose | 475 |

அறிக்கை ஆண்டில் குடும்ப நலம் குறித்தும் கருத்தடை அவசியம் குறித்தும் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

### பொது நல மருத்துவ நிவாரணம் :

அரசினரால் நடத்தப் பெற்று வரும் காமராஜ் அரசு மருத்துவ நிலையம் வழக்கம் போல் அறிக்கையாண்டிலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும் அண்ணாமலை நகரில் அண்ணாமலை பல்கலைக்கழகத்தால் மருத்துவக்கல்லூரி மாணவர்களுக்கான பயிற்சிக்கும் பொது மக்கள் சிகிச்சைக்கும் ஓர் மருத்துவமனை சுமார் 800 படுக்கைகள் கொண்டதாக அமைக்கப்பட்டு நடந்து வருவதினால் சிதம்பரம் நகரமக்களுக்கு சிறந்த மருத்துவ உதவி கிடைக்கிறது.

## 16. நகராட்சிக்குட்பட்ட கழிப்பிடங்கள் விவரம்:–

நகராட்சியில் மொத்தம் 18 கழிப்பிடங்கள் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. கட்டணம் கொடுத்து உபயோகப்படும் கழிப்பிடம் கீழ்க்கண்ட 6 இடங்களில் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. இந்த இனங்களை ஏலம் விடப்பட்டதில் வருமானம் ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| 1. கீழ வீதி | = | ரூ. 2232987/- |
| 2. பேரூந்து நிலையம் | = | ரூ. 1321359/- |
| 3. மேல வீதி தெற்கு வீதி சந்திப்பு | = | ரூ. 354765/- |
| 4. மேல வீதி வடக்கு வீதி சந்திப்பு | = | ரூ. 295070/- |
| 5. இளமையாக்கினார்கோயில்தெரு | = | ரூ 46321/– |
| கூடுதல் | | ரூ. 4250502/- |

**கட்டணம் இல்லாமல் பொது மக்களின் வசதிக்காக கீழ்க் கண்ட இடங்களில் சமுதாய கழிப்பிடங்கள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது**

1. தில்லையம்மன் கோவில் தெரு ஆண்கள் கழிவறை
2. தில்லையம்மன்கோவில் தெரு பெண்கள் கழிவறை
3. பேருந்து நிலையம் ஆண்கள் கழிவறை
4. பேருந்து நிலையம் பெண்கள் கழிவறை
5. மின்நகர் பெண்கள் கழிவறை
6. மின்நகர் ஆண்கள் கழிவறை
7. ஞாயிற்றுக்கிழமை மடம் தெரு
8. கன்னிராமன் தெரு
9. காசிம்கான் பேட்டை தெரு,
10. குஞ்சரமூர்த்திவினாயகர் கோயில் தெரு
11. பைபாஸ் சாலை
12. கொத்தவால் ஸ்டேஷன் தெரு
13. சின்ன காஜியார் தெரு
14. தில்லை காளியம்மன் கோயில் தெரு

**நகரில் உள்ள குப்பை கூளங்களை அகற்றுவதற்கு கீழ் கண்ட கருவிகள் அறிக்கை ஆண்டில் உபயோகத்தில் இருந்தது**

| | | |
|---|---|---|
| LCV | – | 7 எண்கள் |
| BOV | – | 21 எண்கள் |
| டிராக்டர் | – | 4 எண்கள் |
| Compactor lorry | – | 1 எண்கள் |
| Tipper lorry | – | 1 எண்கள் |

**<u>இப்பிரிவில் பணிபுரிய அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் விவரம்</u>**

| வ.எண் | அனுமதிக்கப்பட்ட பணியாளர்கள் விவரம் | தற்பொழுது பணிபுரியும் அலுவலர் |
|---|---|---|
| 1 | துப்புரவு அலுவலர் – 1 | 1 |
| 2 | சுகாதார ஆய்வர் –4 | 1 (காலியிடம்–3) |
| 3 | துப்புரவு மேற்பார்வையாளர் – 7 | 5 (காலியிடம்–2) |
| 4 | துப்புரவு பணியாளர்கள் – 192 | 31 (காலியிடம்–161) |

**<u>துப்புரவு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வாகன விவரம்</u>**

| வ.எண் | வாகன எண் |
|---|---|
| 1 | TN 91 B 5074 டிம்பர் லாரி |
| 2 | TN 91 B 5126, காம்பேக்ட் |
| 3 | TN 91 BW 7378 TATA ACE |
| 4 | TN 91 F 3276 TATA ACE |

| | |
|---|---|
| 5 | TN 91 F 3215/ TATA ACE |
| 6 | TN 91 F 3243 TATA ACE |
| 7 | TN 91 F 3269/ TATA ACE |
| 8 | TN 91 F 3220/ TATA ACE |
| 9 | TN 91 F 3268 TATA ACE |
| 10 | TN 91 F 3263/ TATA ACE |

**துப்புரவு பணியில் உள்ள துப்புரவு பணியாளர்கள் மேற்கொள்ளும் பணியின் இடங்களின் விவரம்.**

அனைத்து 33 வார்டுகளிலும் 100 சதவீதம் வீட்டுக் குப்பை, வணிகநிறுவனங்கள் மற்றும் தெருகுப்பைகளை அகற்ற துப்புரவு பணியாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

நகராட்சி பணியாளர் செல்லாத இடங்களில் சுய உதவிகுழுக்கள் மூலம் நபர்கள் பின்வருமாறு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

கங்கை மகளிர் சுயஉதவிக்குழு – 153

## 17) திடக் கழிவு மேலாண்மை: ( SOLID WASTE MANAGEMENT )

சிதம்பரம் நகராட்சி 1873–ஆம் ஆண்டு நகராட்சியாக்கப்பட்டு தற்பொழுது 33 வார்டுகளுடன் 4.82 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்ட நகரமாகும். சிதம்பரம் நகரிலிருந்து மாவட்ட தலைநகரமான கடலூரார் வடகிழக்குப் பகுதியில் 55 கி.மீ தொலைவிலும், பண்ருட்டி மற்றும் வடலூர் நகரங்கள் வடபகுதியிலும் விருத்தாசலம் நகரம் மேற்கு பகுதியிலும் கும்பகோணம் மற்றும் மயிலாடுதுறை நகரங்கள் தெற்கு பகுதியிலும் சிறந்த போக்குவரத்து வசதியுடன் அமைந்துள்ளன. மேலும் சிதம்பரம் வருவாய் வட்டத்தின் தலைமையிடமாக உள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி நகரின் மக்கள் தொகை 62,153 ஆகும். தற்பொழுது உள்ள மக்கள் தொகை 65084 ஆகும்.

**இந்நகராட்சியில் BOV 18 எண்ணிக்கை, LCV 9 எண்ணிக்கை வாகனங்கள் மூலம் 165 துப்புரவு பணியாளர்கள் bfhண்டு வீடுவீடாக சென்று மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் என தினசரி 23.18 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு வருகிறது. இதில் 12.120 மெட்ரிக் டன் மக்கும் குப்பைகள் தினசரி சேகரிக்கப்பட்டு வருகிறது. சேகரம் செய்யும் மக்கும் குப்பைகள் நான்கு பசுமை நுண் உரக்கிடங்கின் மூலம் மக்க வைக்கப்படுகிறது. மீதமுள்ள உள்ள 11 மெட்ரிக் டன் மக்காத குப்பைகள் தினசரி தரம் பிரிக்கப்பட்டு பிளாஸ்டிக் கழிவுகள் லாரி மூலம் அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.**

## 18) உணவுக் கலப்பட தடுப்புச் சட்டம்:

இச்சட்டத்திற்கென தனியாக அரசு துறை ஆரம்பிக்கப்பட்டு அலுவலர்கள் அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். நகராட்சி அலுவலகத்தில் இதற்காக அறை ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது திரு அருண்மொழி உணவு பாதுகாப்பு அலுவலர் 01.04.2022 முதல் 31.03.2023 வரை பணிபுரிந்து வருகிறார்.

## 19) அச்ச அருவருக்கத்தக்க உரிமையாணை:

நகரிலுள்ள அச்ச அருவருக்கத்தக்க வியாபாரிகளுக்கு உரிமம் ( லைசென்ஸ் ) மூலம் அறிக்கை ஆண்டில் மொத்தம் 413 இனங்களுக்கு உரிமையாணை வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் வருவாய் ரூ. 286965/- ஆகும்.

- 10புதிய உரிமம் – 403
- புதுப்பிக்கப்படும் உரிமம் – 430
- உரிமம் வசூல் தொகை – ரூ.581660/–

## 20) சந்தைகளும் , விழாக்களும்

தமிழ்நாடு , அண்டை மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள அனைவரையும் கவர்ந்திடும் வண்ணம் ஸ்ரீ நடராஜ பெருமானின் ஆனித் திருமஞ்சனமும் , ஆரூத்ரா தரிசன

விழாவும் ஒவ்வொரு ஆண்டும் முறையே ஆனி மாதத்திலும் , மார்கழி மாதத்திலும் ஒவ்வொன்றும் 10 நாட்கள் உற்சவம் நடைபெற்று வருகின்றது.

இவ்விழாவிற்கு சுமார் 50 ஆயிரம் பேர்களுக்கு மேல் கூடுவது வழக்கம். இத்திருவிழாவிற்கு முன்னரும் , விழா நாட்களிலும், பின்னரும் பொது மக்களுக்கு எவ்வித தொற்று நோயும் ஏற்படா வண்ணம் தக்க சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தும் நகராட்சி பொது சுகாதார இலாகாவினரால் தடுப்பு ஊசியும் போடப்படுகிறது. மேலும் விழா நடக்கும் முக்கிய இடமான கீழ வீதியில் தற்காலிக கொட்டகை போட்டு திருவிழாக் கடைகள் நடத்தும் உரிமையையும் ஏலம் விடப்படுகிறது. இதன் மூலம் அறிக்கை ஆண்டில் வரவு வந்தது ரூ.256000/– ஆகும். இத்திருவிழாவிற்கும் பொது சுகாதார பிரிவில் உள்ள துப்புரவு பணியாளர்களைக் கொண்டு நகரை மிகவும் துப்புரவாக வைக்கப்பட்டு வந்தது.

## டெங்கு நோய் தடுப்பு பணி:

இந்நகராட்சி பகுதிகளில் கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு நோயை தடுக்கும் பொருட்டு 50 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு 33 வார்டுகளிலும் உள்ள வீடுகளில் கொசு ஒழிப்பு பணிகள் நடைபெற்றுவருகிறது. நாளது தேதிவரை டெங்கு நோய் நகராட்சி பகுதிகளில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின் படி 8 பரப்புரையாளர்கள் 2 மேற்பார்வையாளர்கள் சிதம்பரம் நகராட்சியில் நியமிக்கப்பட்டு திடக்கழிவு மேலாண்மை, IHHL, ODF தொடர்பான பணிகள் விழிப்புணர்வு பொது மக்களிடம் ஏற்படுத்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

## 21 . குடிநீர் வழங்கல் பணி :

சிதம்பரம் நகராட்சியானது தேர்வுநிலை நகராட்சியாகும். இது கடலூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது இதன் மக்கள்தொகை 62153 (2011 Senses) ஆகும். தற்போதைய மக்கள் தொகை ரூ.65084 ஆகும்.

### பழையதிட்டம்

இந்நகராட்சிக்கு குடிநீரானது நகராட்சி பகுதியிலிருந்து 8 கி.மீ தொலைவில் சி.வக்கரமாரியில் தலைமைநீரேற்று நிலையம் அமைக்கப்பட்டு 1915 முதல்செயல்பட்டுவருகிறது. இந்த இடத்தில் இரண்டு பெரிய குளங்கள்தோண்டப்பட்டு(சுமார் 1400 MLD கொள்ளளவு கொண்டது) வீராணத்திலிருந்து பாசனத்திற்காக திறந்து விடப்படும் நீரினைவடக்கு ராஜன் வாய்க்கால் வழியாக வரும் நீர் இக்குளத்தில் நிரப்பப்பட்டு, சுத்திகரிப்புநிலையம் (Pressure Filter) மூலமாக சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட இந்த சுத்திகரிப்பு இயந்திரமானது (Pressure Filter) 15 ஆண்டுகளுக்கு முன்னர் முற்றிலும் பழுது ஏற்பட்டு செயல்படாமல் உள்ளது. எனவே, மேற்படி தலைமையிடத்தில் ஆழ்துளை கிணறுகள் மூலம் 1.00 MLD குடிநீர் ஆதாரம் பெறப்படுகிறது.

### புதிய திட்டம்

சிதம்பரம் மற்றும் அருகே உள்ள கிராம பகுதிகளுக்காக கூட்டுகுடிநீர் திட்டம் ஆதனூர் கிராமத்தில் கொள்ளிடம் நீர் ஆதாரம் பெறும் வகையில் ரூ.255 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த திட்டத்தில் தினசரி 9.00 எம்.எல்.டி குடிநீர் ஆதாரம் சிதம்பரம் நகருக்கு வழங்க வடிவமைக்கப்பட்டது. இத்திட்டம் செயல்பட துவங்கினால் சிதம்பரம் நகருக்கு குடிநீர் தட்டுபாடு ஏற்பட வாய்ப்பில்லை.

### தற்போதைய நிலை

சி.வக்காரமாரி தலைமை நீரேற்று நிலையத்தின் மூலம் 1.00 MLD,நகரில் 6 ஆழ்துளை கிணறுகள் மூலம் 2.55 MLD குடிநீரும், 73 மினிபவர் பம்பு மூலம் 0.25 MLD,குடிநீரும் தினசரிலாரிமூலம் 0.10 MLD குடிநீரும் ஆக மொத்தம் 3.90 MLD தினந்தோறும் வழங்கப்பட்டு

வருகிறது.  இது நபர் ஒருவருக்கு 63 LPCD  என்ற வகையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

பாதாளசாக்கடைதிட்டம் செயல்பாட்டில் உள்ள நகரமாக உள்ளதால் ஒருநாளைக்கு நபர் ஒருவருக்கு 135 LPCD  என்ற வகையில் குடிநீர் விநியோகம் செய்யப்படவேண்டும் ஆனால் தற்போது 63 LPCD குடிநீர் மட்டுமேவழங்கப்பட்டுவருகிறது. இதன்பொருட்டு குடிநீர் பற்றாக்குறையை போக்குவதற்கு குடிநீர் ஆதாரத்தை பெருக்கிட கொள்ளிடம் ஆற்றில் ஆதனூர் குமாரமங்கலம் கதவணைக்கு மேற்புறமாக நிரந்தர நீர் ஆதாரத்தை ஏற்படுத்திட ரூ.143.19 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்திட பணிகள் நடைபெற்று வருகிறது.

## 22 பாதாள சாக்கடை திட்டம்:

சிதம்பரம் நகரின் சுற்றுபுற சுகாதார நலன் கருதி அரசாணை எண்.28/MASWS(MAIII) துறை நாள்.27.01.2014ன் படி புதிய பாதாள சாக்கடை திட்டம் ரூ.7562.23 லட்சம் செலவினத்தில் அமைத்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செய்து முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 28.05.2020 அன்று பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. இத்திட்டத்தின் இயக்குதல் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தின் கழிவு நீர் சுத்தகரிப்பு நிலையம் லால்புரம் பகுதியில் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தின் இசைவுடன் நிறுவப்பட்டது.  இத்திட்டத்தின் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரினை பாசிமுத்தான் ஓடையில் விடுவதற்கு அப்பகுதி பொதுமக்கள் ஆட்சேபணை தெரிவித்துள்ளதன் அடிப்படையில் பொது பணித்துறை, கொள்ளிடம் வடிநிலக்கோட்டம், கடித எண்.191/2020/மகா20 இவஅ.1, நாள்.06.10.2020ன்படி  அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கான சாத்தியமான மாற்று வழியாக  சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து 2.50கீ.மி தூரத்தில் உள்ள வெள்ளாறுபடுகையில் குழாய்கள் மூலம் விடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இப்பணிக்கான தொழில்நுட்ப சாத்திய கூறுகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பரிசீலித்து  வடிநிலை தன்மையுடன் குழாய்கள் மூலம் வெள்ளாறுக்கு எடுத்து செல்ல இக்கூடுதல் பணிகள் அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலை உள்ளன எனவும் இப்பணிக்கான  மதிப்பீடு ரூ.478 இலட்சத்திற்கு பணிகள் நடைபெற்று வருகிறது.

## 23  பொது நலம் :

தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான ஊர்தியுடன் கூடிய தீயணைப்பு படை நகரின் எல்லைக்குள் இரயில்வே நிலையத்தின் அருகில் உள்ளது. அவசர கால வண்டியும் ( ஆம்புலன்ஸ் ) உள்ளது. இது இருப்பது நகருக்கும் நகரின் அருகில் உள்ள கிராமங்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. அவசர கால தீ விபத்தை தடுக்க சாதனங்கள் அமைக்கப்பட்.டுள்ளது.

## 24. போக்குவரத்து பேரூந்துகள் – வாடகை பேரூந்துகள்:

நகராட்சியில் பொது மக்களுக்கு எவ்வித போக்குவரத்து வண்டிகளும் நடத்தப்பெறவில்லை.  நகரில் போக்கு வரத்து கழகங்கள் மற்றும் அரசு விரைவு போக்கு வரத்து கழகமும் தனியார் நடத்தும் போக்குவரத்து வண்டிகளும் பொது மக்களுக்கு மிகவும் உபயோகமாக உள்ளது. இது தவிர நகரின் அருகில் உள்ள உட் கிராமங்களுக்கு செல்வதற்கு வசதியாக தனியாரின் சிற்றுந்துகள் ( சிறிய பேரூந்துகள் ) இயக்கப்பட்டு வருகிறது.

## 25) மார்க்கெட் :

நகராட்சியில் இரண்டு தினசரி நாளங்காடிகள் நடத்தப் பெறுகிறது. மேலவீதியில் ஒன்றும் , மற்றொன்று ஞானப்பிரகாசம் தெருவிலும் உள்ளது. மேலும் அண்ணா கலையரங்கத்தில் உழவர் சந்தை செயல்பட்டு வந்த இடத்தில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.5.77 கோடியில் தினசரி மார்கெட் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

## 26) பேருந்து நிலையம்:

இந்நகராட்சி பேருந்து நிலையம் ( பி ) கிளாஸ் பேருந்து நிலையம் ஆகும். இந்த பேருந்து நிலையத்திற்கு வரும் பேருந்துகளுக்கு 01–11–80 முதல் நாள் ஒன்றுக்கு ரூ. 3–00 வீதம் வாடகை வசூலிக்கப்பட்டது. அரசாணை எண் ( பல் வகை ) 175 உள் ( போக்குவரத்து VII ) துறை நாள் 04–03–2002 ன் படி பேருந்து ஒன்றுக்கு ரூ.12/– வீதம் கட்டணம் உயர்த்தி 16–03–2002 முதல் குத்தகைதாரரால் வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்த வசூல் செய்யும் உரிமையை வருடந்தோறும் பொது ஏலத்தில் விடப்படுகிறது. பேருந்து நிலையத்திற்குள் அமைக்கப்பட்டிருக்கும் கடைகள் உணவு விடுதிகள் யாவும் குத்தகைக்கு விடப்பட்டு குத்தகை தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும், புதிய பேருந்து நிலையம் ரூ.15.00 கோடி மதிப்பீட்டிற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேலும் புதிய பேருந்து நிலையத்தில் கூடுதலாக ரூ.8.30 கோடி மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

**பழைய பேருந்து நிலையத்தில் Bus-shelter கட்டும் பணி**

சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட பழைய பேருந்து நிலையத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2024–25ன்கீழ் ரூ.4.47 மதிப்பீட்டில் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

## 27) ஆடு அடிக்கும் தொட்டி:

நகராட்சிக்குச் சொந்தமான மச்ச மார்க்கெட் காம்பவுண்டில் ஒரு ஆடுஅடிக்கும் தொட்டி கட்டப்பட்டு நல்ல முறையில் அறிக்கை ஆண்டில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தனியார் ஆடு அடிக்கும் தொட்டி ஏதும் இல்லை. அறிக்கை ஆண்டில் பொது ஏலத்தில் விடப்பட்டது. அதன் வருமானம் ரூ.117298/– ஆகும். இது சென்ற ஆண்டு தொகை ரூ 117298/– ஆகும்.

## 28) வாரச் சந்தை:

வார சந்தை நகராட்சியில் ஏதும் இல்லை.

## 29) மச்ச மார்க்கெட்:

மச்ச மார்க்கெட் நகரின் வடக்குப் பகுதியில் வடக்கு மெயின் ரோட்டில் அமைந்துள்ளது. இது நகராட்சியின் சொந்தக் கட்டிடம் மச்ச மார்க்கெட் வசூல் செய்யும் உரிமையை அறிக்கை ஆண்டில் பொது ஏலத்தில் விடப்பட்டது. அதன் வருமானம் ரூ.763575/– ஆகும். இது சென்ற ஆண்டு தொகை ரூ.763575/– ஆகும்.

## 30) மரம் வளர்த்தல் :

M/s EFI மூலம் என்ற சமூக தொண்டு நிறுவனம் புரிந்துணர்வு நிர்பந்தத்தின் மூலம் உரகிடங்கில் மீட்டெடுக்கப்பட்ட 3.00 ஏக்கர் நிலத்தின் ஒரு பகுதியை சுமார் 2.00 ஏக்கர் நிலப்பரப்பில் மியாவாக்கி முறையில் 3600 மரகன்றுகளை நடவு செய்து நகர்புற வனவியல் (Urban Forestry) அல்லது குறுங்காடு அமைக்க உத்தேசிக்கப்பட்டு இதுநாள் வரையில் 3600 மரகன்றுகள் நடபட்டுள்ளது.

## 31) பூங்காக்கள்:

நகராட்சியின் லால்கான் தெருவில் காந்தி பூங்கா என ஒரு பூங்கா , வ.ஊ.சி. பூங்கா மின் நகர் பூங்கா, சபாநாயகர் தெரு பூங் கா, வாகிச நகர் பூங்கா, மன்மத சாமிநகர் பூங்கா, அம்பேத்கார் நகர் பூங்கா வடக்கு மெயின்ரோட்டில் உழவர் சந்தை, அனந்தீஸ்வரன் கோவில் தெரு, பேருந்து நிலையம் பூங்கா சி.பொன்னம்பலம் நகர் எம்.எஸ் நகர், பொன்னம்பலம் நகர், வாகீச நகர் ஆகிய

பூங்காக்கள் நகராட்சியினரால் பராமரிக்கப்படுகிறது மேலும், ஜி.என்.நகர், சுசிலாம்பால் நகர் ஆகிய இடங்களில் புதிய பூங்கா அமைக்கும் பணி நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023–24ல் ரூ.46.00 லட்சம் மதிப்பீட்டில் பணிமேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் முடிவுற்றுள்ளது. மேற்படி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2024–25ல் இராஜலட்சுமி நகர் பூங்கா அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## நகரமைப்பு பிரிவு நில அபிவிருத்தி

நகரமைப்பு ஆய்வர் பணியிடம் அரசாணை நிலை எண்.10ன் படி 2 நகரமைப்பு ஆய்வர் மற்றும் 1 நகரமைப்பு அலுவலர் ஆகும். தற்போது 1 நகரமைப்பு ஆய்வர் மற்றும் 1 நகரமைப்பு அலுவலர் பணிபுரிந்து வருகிறார். நீர்நிலை ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றுப்பட்டது.

### 32) நில அபிவிருத்தி நகரமைப்புத் திட்டம்:

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிக்கு 1960 மற்றும் 1972ல் தயாரிக்கப்பட்ட 6 நகரமைப்பு திட்டங்கள் அவற்றில் விரிவு அபிவிருத்தி திட்டம் 1 , விரிவு அபிவிருத்தி திட்டம் 3, விரிவு அபிவிருத்தி திட்டம் 6 ஆகிய மூன்று நகரமைப்பு திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு இதுநாள்வரையில் திட்டம் எண் 6 யை தவிர்த்து புதுப்பிக்கப்படாமல் நகர் ஊர்மைப்பு துறை மூலம் இருந்து வருகிறது. திட்டம் எண் 6 புதுப்பிக்க நகர் ஊரமைப்பு துறை அரசு ஒப்புதல் பெற்று வரைபடம் திருத்தி அமைக்கப்பட்டு அரசு ஒப்புதல் நோக்கி நடவடிக்கையில் இருந்து வருகிறது. விரிவு அபிவிருத்தி திட்டம் 5 வரைவு நிலையிலேயே இருந்து வருகிறது. 20 வருடங்களுக்கு ஒருமுறை மறு ஆய்வு செய்யாத நிலையில் உள்ளது. நகர் மன்ற தலைவர் உள்ளூர் திட்ட குழுமத்தின் குழு தலைவராகவும் ஆணையர் அவர்கள் உறுப்பினர் செயலராகவும் உள்ளார்கள்.

### முழுமைத் திட்டம்:

இந்நகராட்சியில் எல்லைக்குட்பட்ட பகுதியில் முழுமைத் திட்டம் தயார் செய்யப்பட்டு பொது மக்களின் ஆட்சேபணை மற்றும் ஆலோசனைகள் பெற்று உள்ளூர் திட்ட குழுமத் தீர்மானம் எண் 5 நாள் 13.05.2003ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இவ்வலுவலக ந.க.எண் 2240/2002/F1 நாள் 19.03.2003 கடிதத்தின் மூலம் அனுப்பப்பட்டு அரசு செயலர் அவர்களால் 22.08.2006ம் ஆண்டு அனுமதி அளிக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

## 33) வருவாய் கணக்கு:

இந்நகராட்சியில் கட்டிடங்கள் காலியிடங்கள் மீதான வரி , அட்டவணையின் படி வரி விதிக்கப்படுகிறது. நகராட்சிக்கு வர வேண்டிய வரி இனங்களையும் வரி இல்லாத இனங்களையும் வசூல் செய்யும் பணியை அறிக்கை ஆண்டின் கீழ்க்கண்ட பணியாளர்கள் கவனித்து வந்தனர்.

| | |
|---|---|
| 1. வருவாய் ஆய்வர்கள் | 2 |
| 2. வருவாய் உதவியாளர்கள | 6 |

## 34) வரி விகிதம்:

அறிக்கை ஆண்டில் கணக்குப் படி வருட வாடகை மதிப்பு பெயரில் ஒரு வருட வரி விகிதம் 17.9% சதவீதம் ஆகும். 2024–25 வரி விதிப்பிற்கு கொண்டு வரப்பெற்ற புதிய கட்டிடங்களின் எண்ணிக்கை 256 புதிய காலிமனை வரி விதித்தது 67 மொத்தம் 323.

## 35) வர வேண்டிய வசூல் நிலுவை:

இந்நகராட்சியில் 2024–2025 ஆண்டுக் கணக்கில் வர வேண்டிய வருமான விபரம் கேட்பு வசூல் நிலுவைப் பட்டியல் படி வரி இனம் மற்றும் வரியில்லா இனம் மூலம் வர வேண்டிய தொகை (கேளிக்கை வரி, முத்திரை வரி மீதான மிகு வரி , விற்பனை வரி மீதான மிகு வரி நீங்கலாக )

| | | | |
|---|---|---|---|
| கேட்பு | = ரூ. | 931.81 | லட்சம் |
| வசூல் | = ரூ. | 723.14 | லட்சம் |
| நிலுவை | = ரூ. | 208.68 | லட்சம் |

**36)** நகராட்சி பொது சுகாதாரத்திற்கென தனி கணக்கு இல்லை. பொது நிதிக் கணக்கில் தான் செலவு எழுதப்படுகிறது. எனவே **2024–25** ஆம் ஆண்டு தணிக்கைஅறிக்கையின் படி பொது நிதிக் கணக்கு பற்றாக்குறையில் உள்ளது.

## 2024 – 2025 ல் வரப்பெற்ற தொகை

| வ.எண் | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | முத்திரை வரி மீதான மிகு வரி வரப்பெற்ற தொகை | 3682507 |
| 2. | மாநில நிதி ஆணையத்தினால் வரப்பெற்ற தொகை | 121561764 |
| 3. | CGF | 53600000 |
| 4. | 15$^{TH}$ CFC | 20387080 |
| 5. | KNMT | 102836000 |

## 37 கடன்கள்:

1) கூட்டு குடிநீர் மற்றும் பாதாளசாக்கடை திட்டத்திற்காக பெறப்பட்ட கடன் நிலுவைத்தொகை = ரூ. 51218979/-

## 38) தணிக்கை :

2022–2023 ம் ஆண்டின் தணிக்கை முடிவுற்றது. 2022-2023 ம்ஆண்டு முடிய நிலுவையிலுள்ள தணிக்கைத் தடை எண் 1300 ஆகும்.

## 39)சொத்துக்களும் , கடன்களும் :

இந்நகராட்சியின் 2000 – 2001 முதல் புது கணக்கு முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி சொத்துக்களும் கடன்களும் கணக்கிடப்பட்டுள்ளது.

## UTIS மூலம் கணக்கு முறை

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு ( ந.பி.2 ) துறையின் அரசாணை ( நிலை ) எண்.3. நாள் 12–1–2000 ன் படி இந்நகராட்சிக்கு 1–4–2000 முதல் இயல்பு நிலை கணக்கு வைப்பு முறை அறிமுகப்படுதப்பட்டுள்ளது. அதன்படி 1–4–2000 முதல் புதிய இயல்பு நிலைக் கணக்கு முறையை பின்பற்றி இந்நகராட்சியில் 1–4–2000 முதல் தொடங்கி ஆண்டுதோறும் மே மாதம் 15 ம் தேதிக்குள் (Balance Sheet) இருப்பு நிலைக்குறிப்பு தயார் செய்து உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை உதவி இயக்குநர் கடலூர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.அதில் 2022–23 ன் ஆண்டின் இயல்பு நிலைக் கணக்கு உள்ளாட்சிநிதிக்கணக்கு உதவி இயக்குநர் கடலூர் அவர்களால் தணிக்கை செய்யப்பட்டு முடிவுற்றது.

## 40 சத்துணவு :

அறிக்கை ஆண்டில் சத்துணவுத் திட்டம் அரசு வழிகாட்டுதலின்படி சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

## பள்ளி சத்துணவு ( 5 பிளஸ் 9 மற்றும் 10 பிளஸ் 14 ) திட்டம் :

நகராட்சிப் பள்ளி சத்துணவு மையங்கள் மொத்தம் 9 நகராட்சி பள்ளிகளில் இயங்குகின்றன. இதில் 6 பொறுப்பாளர்களும் 7 சமையலர்களும் 2 உதவியாளர்களும் பணிபுரிகின்றனர். மொத்தம் 1119 குழந்தைகள் தினமும் பயனடைகிறார்கள். மொத்தம் 9 மையங்களும் எந்தவித புகார்களுக்கும் இடமின்றி நல்ல முறையில் இயங்கிவருகின்றது. வாரந்தோறும் வெள்ளிக்கிழமை அனைத்து பள்ளி சத்துணவு மையங்களிலும் பயனாளிகளுக்கு உருளைக்கிழங்கும் செவ்வாய் கிழமை முழு அளவில் கொண்டைக்கடலையும், முழு உருவில் பச்சைப்பயிறும் வேகவைத்து வழங்கப்படுகிறது. வாரம் 5 முட்டைகள் நாள் தோறும் வேகவைத்த முட்டையும் வழங்கப்படுகிறது.

**41)** தேசிய நலத் திட்டங்களில் ஒன்றாக கொடி நாள் வசூல் 2023 ம் ஆண்டுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ரூ.**0.98** லட்சம் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. அக்குறியீட்டின் பிரகாரம் இந்நகராட்சியினால் அடைந்த இலக்கு ரூ.**0.98** லட்சம் ஆகும். இது மொத்த குறியீட்டில் சதவீதமாகும்.